**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2025–ம் ஆண்டு 22–ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**22.09.2025 OS.7/2023 பி.வா.சா.1 ஆஜர்**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வழக்கிற்கு முன்பே மாவட்ட வருவாய் அலுவலரிடம் பட்டா மாறுதல் கோரி மனு செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் மனு மாவட்ட வருவாய் அலுவலரிடம் நிலுவையில் இருந்தபோதே வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டனர் என்றால் சரிதான். மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணையில் இந்த நம்பர் வாதிகள் தாக்கல் செய்த எதிர்உரையில் தாவா வழக்கு நிலுவை குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவில் (பி.வா.சா.ஆ.27) பக்கம் 17ல் சமூகம் நீதிமன்றத்தில் தாவா வழக்கு நிலுவையில் உள்ள விபரம் குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக பாத்திய உரிமை குறித்து சிவில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு பட்டா குறித்து உத்தரவு வழங்க மூகாந்திரம் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.27 ஆவணத்தில் பட்டா மாற்றம் குறித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்ற வாசகங்கள் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.27 ஆவணத்திலேயே தாவா வழக்கின் திருப்புவனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS.No.7/2023 தீர்ப்புரைக்கு கட்டுப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலர் பட்டா மாறுதல் குறித்து உத்தரவிடாதபோது என் பெயரில் ஏற்பட்ட கணிணி பட்டா (பி.வா.சா.ஆ.28) செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி கணிணி பட்டா அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ள வரி ரசீது (பி.வா.சா.ஆ.29) செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவை எதிர்த்து இந்த நம்பர் வாதிகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு செய்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்து சம்மந்தமாக பெறப்பட்ட எந்த ஆவணமும் ஏற்றுக்கொள்ளத்தக்க தல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 3 ஆவணமும் வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.